# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

*********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

முறையீட்டு மனு எண்.193/2017/பே
ஆணை எண். 46/2018, நாள் 27 –02–2018

திரு. ந. சந்திரன்,
த/பெ திரு. நல்லி,
குப்புரெட்டிபட்டி,
இனுங்கூர் அஞ்சல்,
குளித்தலை வட்டம்,
கரூர் மாவட்டம். -- முறையீட்டு மனுதாரர்

1. திரு. முத்துகுமார்,
   குடிநீர் குழாய் பொருத்துநர்,
   மருதூர் பேரூராட்சி,
   கரூர் மாவட்டம்.
2. திருமதி. கனகவள்ளி,
   இளநிலை உதவியாளர்,
   மருதூர் பேரூராட்சி,
   கரூர் மாவட்டம்.
3. திரு. க. சண்முகம்,
   முன்னாள் செயல் அலுவலர்,
   மருதூர் பேரூராட்சி,
   கரூர் மாவட்டம்.
   ( தற்போது திண்டுக்கல் மாவட்டம்
   வட மதுரை பேரூராட்சியில் செயல்
   அலுவலராக பணிபுரிந்து வருகிறார்) -- எதிர் மனுதாரர்கள்

கரூர் மாவட்டம், மருதூர் பேரூராட்சி, குப்புரெட்டிபட்டியை சேர்ந்த திரு ந. சந்திரன் என்பவரின் 06.10.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 09.10.2017 அன்று பெறப்பட்டு 193/17 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :–

**ஆணை**

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், கரூர் மாவட்டம், மருதூர் பேரூராட்சியில் பிளம்பராக பணிபுரியும் திரு. முத்துக்குமார், இளநிலை உதவியாளர், திருமதி. கனகவல்லி மற்றும் முன்னாள் செயல் அலுவலர் திரு. க. சண்முகம் ஆகியோர் மீது கீழ்க்கண்டவாறு புகார்களை தெரிவித்து தனது முறையீட்டு மனுவினை விசாரணை கோரி இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்:-

(i) திரு. முத்துக்குமார் என்பவர் மருதூர் பேரூராட்சி அலுவலகத்தில் பிளம்பராக பணியில் இருந்தாலும் அனைத்து அதிகாரங்களையும் தன் கையில் வைத்துக் கொண்டு அதிகார துஷ்பிரயோகம் செய்வதாகவும், மேலும், மேற்படி திரு. முத்துக்குமார் பேரூராட்சியில் விடப்படும் டெண்டர்களை அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் போன்றோர்கள் பெயரில் ஒப்பந்தம் பெற்று அவ்வேலைகளை தானே செய்வதாகவும், தனது வருமானத்திற்கு அதிகமாக சொத்துகள் சேர்த்துள்ளதாகவும் முறையிட்டுள்ளார்.

(ii) மேற்படி பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக உள்ள திருமதி. கனகவல்லி அப்பேரூராட்சியில் 2009 முதல் தொடர்ச்சியாக பணிபுரிந்து வருவதாகவும், தனது வேலைகள் அனைத்தையும் திரு. முத்துக்குமாரிடம் ஒப்படைத்துவிட்டு எந்தவிதமான வேலையினையும் செய்யாமல் இருந்து வருவதாகவும் திரு. முத்துக்குமார் செய்யும் அனைத்து சட்டவிரோதமான பணிகளுக்கும் உடந்தையாக இருந்து பெரும் பணமும் சொத்தும் சேர்த்து வருவதாக முறையிட்டுள்ளார்.

(iii) மேலும், மேற்படி பேரூராட்சியில் 2011 முதல் 2016 வரை செயல் அலுவலராக பணிபுரிந்த திரு. சண்முகம், திரு. முத்துக்குமாருடன் சேர்ந்து கொண்டு செய்யாத வேலைகளுக்கும், சீமைக் கருவேல மரங்களை சுத்தம் செய்ததாக கூறி பொய்யான ரசீதுகள் போட்டும், மேலும் திரு. முத்துக்குமார் மற்றும் திருமதி. கனகவல்லி ஆகியோர் துணையுடன் தனது வருமானத்திற்கு அதிகமாக சொத்துக்களை தனது பெயரிலும், தனது குடும்பத்தாரின் பெயரிலும் வாங்கி குவித்துள்ளார் என்று முறையிட்டுள்ளார்

மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி மருதூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 12.10.2017ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது அதன்படி, மருதூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 245/2017/நாள் 27.10.2017ன் படி தனது விளக்க அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். மேற்படி விளக்க அறிக்கையில், மருதூர் பேரூராட்சி, செயல் அலுவலர், கரூர் மாவட்டம், மருதூர் பேரூராட்சியில் குடிநீர் குழாய் பொருத்துநர் பணியிடத்தில் பணிபுரியும் திரு. ப. முத்துக்குமார் என்பவர், அப்பேரூராட்சியில் குடிநீர் திட்டப் பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குடிநீர் திட்டப் பணிகள் தவிர அலுவலக பணிகள் ஏதும் செய்வதில்லை எனவும் குடிநீர் திட்டத்தில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் மற்றும் மின் மோட்டார் பழுதுகளை செயல் அலுவலரின் அனுமதி பெற்று சம்பந்தப்பட்ட பணியாளர்களையும் ஒபபந்தக்காரர்கள் பணி செய்வதையும் கவனித்து வருவதாகவும், திரு. முத்துக்குமார், என்பவர் குடிநீர் குழாய் பொருத்துநர் பணிகளை மட்டுமே செய்து வருவதாகவும், அவருக்கும் இப்பேரூராட்சியில் நடைபெறும் திட்டப் பணிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை எனவும் பேரூராட்சியில் நடைபெறும் திட்டப் பணிகள் அனைத்தும் பேரூராட்சி மன்றத்தில் அனுமதி பெறப்பட்டு

ஒப்பந்தப்புள்ளி வெளியிடப்பட்டு, குறைந்த விலைப்புள்ளி வழங்கும் ஒப்பந்தக்காரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், திருமதி. எம். கனகவல்லி, இளநிலை உதவியாளர் என்பவர் இப்பேரூராட்சியில் 2009 முதல் பணிபுரிவதாகவும் இவரும் திரு முத்துக்குமார் என்பவரும் சட்டத்திற்கு புறம்பான செயல்கள், ஊழல்கள், மோசடிகள் செய்வதாக கூறப்பட்டுள்ளது உண்மைக்கு புறம்பானது எனவும் தனது அறிக்கையில் பேரூராட்சியின் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

திரு க. சண்முகம், மருதூர் பேரூராட்சியில் 19.09.2011 முதல் 30.04.2013 வரையிலும், 01.09.2016 முதல் 30.01.2017 வரையிலும் செயல் அலுவலராக பணிபுரிந்துள்ளார் எனவும் மேற்படி செயல் அலுவலர் பணிபுரிந்துள்ள காலத்தில் சீமைக் கருவேல மரங்கள் அகற்ற எவ்விதமான உத்திரவும் பிறப்பிக்கவில்லை எனவும், மேற்படி புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது எனவும், மேலும் மாதந்தோறும் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் பேரூராட்சி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் மூலம் 2016 ஆம் ஆண்டு வரை தணிக்கை செய்யப்பட்டுள்ளது எனவும் திரு. க. சண்முகம், தற்போது இப்பேரூராட்சியில் பணி புரியவில்லை எனவும் தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இப்பொருள் தொடர்பான நேரடியான விசாரணைக்காக இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராக 08.11.2017ம் தேதியிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை மூலம் முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர்களுக்கு ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் திரு. ந. சந்திரன், இம்முறைமன்ற நடுவத்தில் 24.01.2018 அன்று நேரில் ஆஜராகி வாக்குமூலம் அளித்தார். மேற்படி தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர், முன்பு செயல் அலுவலராக பணிபுரிந்த திரு சண்முகம் என்பவரிடம் குப்புரெட்டிபட்டிக்கு நீண்ட நாட்களாக தண்ணீர் வசதி இல்லாத காரணத்தினால் குடிநீர் பிரச்சினை சம்பந்தமாக கூட்டு குடிநீர் திட்டத்தில் ரூ 25.00 லட்சம் ஒதுக்கீடு செய்யுமாறு கோரியிருந்ததாகவும் மருதூர் பேரூராட்சியில் பிளம்பராக பணியில் இருந்த திரு ப.முத்துக்குமார் என்பவர் இதனை தடுத்து நிறுத்திவிட்டார் எனவும், தான் மனு கொடுத்து ஓராண்டிற்கு பிறகு இத்திட்டம் நிறைவேற்றப்பட்டதாகவும், ஏதாவது பொது மக்கள் பிரச்சினை என்று செயல் அலுவலரிடம் கூறினால், இப்பேரூராட்சியில் பணிபுரிந்த செயல் அலுவலர்களான திரு ரவிச்சந்திரன், திரு.விஜயசங்கர், மற்றும் திரு சண்முகம் ஆகியோர் திரு முத்துக்குமார் என்பவரை பாருங்கள் என சொல்வார்கள் என்றும் தான் திரு, முத்துக்குமாரை பார்த்தால் அவர் தனக்கு எப்போது செய்யவேண்டும் என தெரியும் நீங்கள் போங்கள் என சொல்வார் எனவும், திரு முத்துக்குமார் பிளம்பர் வேலை செய்யாமல் திருமதி கனகவல்லி செய்யவேண்டிய வேலைகளை மட்டுமே செய்வதாகவும், 75 சதவீதம் பணிகளை திரு முத்துக்குமாரும் 25 சதவிதம் பணிகளை மட்டுமே திருமதி கனகவல்லி செய்வார் எனவும் திரு.ப. முத்துக்குமார் சொத்து சேர்த்தார் என்பதற்கான ஆதாரம் ஏதும் தன்னிடம் இல்லை எனவும் திரு முத்துக்குமார் பேரூராட்சி ஒப்பந்தங்களை அவரது பினாமிகளான திரு.நாகமணிகண்டன் மற்றும் திரு பழனிசாமி என்பவர்களுக்கு கொடுப்பதாகவும், திரு நாகமணிகண்டனுக்கு தெருவிளக்கு மற்றும் குடிநீர் பணிகளையும், திரு பழனிசாமி என்பவருக்கு சிமெண்ட் ரோடு, தார்ச்சாலை

பணிகளையும் செய்வதற்கு கொடுத்துள்ளார் எனவும் ஆனால் திரு நாகமணிகண்டன் மற்றும் திரு பழனிச்சாமி என்பவர்கள் திரு.முத்துக்குமாருடைய பினாமிகள் என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் தன்னிடம் இல்லை எனவும், மேற்படி நபர்கள் பணிகளை சரியாக செய்யவில்லை என புகார் தெரிவித்து மாவட்ட ஆட்சியரிடம் தனது பெயரில் மனு கொடுக்காமல் ஊர் பொதுமக்கள் என்ற பெயரிலேயே மனுவினை கொடுத்ததாகவும் மாவட்ட ஆட்சியர் மேற்படி மனுவின் மீது நடவடிக்கை எடுத்துள்ளார் எனவும், தற்போது தனது ஊரில் தண்ணீர் பிரச்சினை ஏதும் இல்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மருதூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திருமதி கனகவல்லி என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் 24.01.2018 அன்று நேரில் ஆஜராகி வாக்குமூலம் அளித்தார் மேற்படி வாக்குமூலத்தில், தான் 2006 ஆம் ஆண்டு முதல் மருதூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணி புரிந்து வருவதாகவும். மனுதாரர் திரு சந்திரன் என்பவர் பலருடைய சொத்து வரி விதிப்பு சம்பந்தமாக பில்களை கொண்டு வந்து பணம் கட்டிவிட்டு பில் வாங்கி செல்வார் எனவும் தனக்கும் முறையீட்டு மனுதாரருக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை எனவும், குடிநீர் சம்பந்தமாக பிரச்சினைகளை தன்னிடம் சொல்லும் போது தான் குடிநீர் சம்பந்தமான பணிகளை செய்யும் திரு முத்துக்குமார் என்பவரை பாருங்கள் என சொல்வதாகவும் ஊரில் இருந்து வந்து பிரச்சினைகளை சொல்லும்போது எந்த பிரச்சினை யாருக்கு சம்பந்தப்பட்டதோ சம்பந்தப்பட்டவர்களுக்கு சொல்வதாகவும் தனது பணிகளை தானே பார்ப்பதாகவும், ஏதாவது உதவி தேவை என்றால் திரு முத்துக்குமார் என்பவரிடம் சொல்வதாகவும் மற்றபடி தனது பணிகளை அவர் பார்க்கிறார் என்பதும், தனது பணிகளை அனைத்தையும் அவரை பார்க்கச் சொல்வதாக தெரிவித்துள்ளதும் உண்மை இல்லை என தெரிவித்துள்ளார்.

மருதூர் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலரும் தற்போது திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை பேரூராட்சியின் செயல் அலுவலருமான திரு க.சண்முகம் இம்முறைமன்ற நடுவத்தில் 24.01.2018ல் நேரில் ஆஜராகி வாக்குமூலம் அளித்தார். மேற்படி வாக்குமூலத்தில், தான் மருதூர் பேரூராட்சியில் ஒன்றரை ஆண்டுகளுக்கும் அதற்கு முன்பு நான்கு மாதமும் செயல் அலுவலராக பணிபுரிந்துள்ளதாகவும், திரு ந. சந்திரன் என்பவருடைய மனு விவரம் தனக்கு தெரியும் எனவும், பொதுமக்களிடம் அவர்களது பிரச்சினை தெரிந்து பொய்யான வாக்குறுதி அளித்து பணம் பெறுவார் எனவும், அதிகாரிகளிடம் அவர் கூறியது நடைபெறவில்லையென்றால் அவற்றை சமாளிக்க அதிகாரிகள் மேல் மனு போடுவார் எனவும் தான் பணியில் இருக்கும்போது வரி போடுவது, வீடு கட்டுவதற்கு அனுமதி போன்ற பிரச்சினைகளுக்காக தன்னிடம் வருவார் எனவும், சட்டப்படியாக இருந்தால் தான் செய்து கொடுத்ததாகவும் அவ்வாறு செய்ய முடியவில்லை என்றால் தன் மீது மனு போடுவார் எனவும் திரு. முத்துக்குமார் என்பவர் சிறு அலுவலக வேலைகளை செய்து கொடுப்பார் எனவும், அவர் பொதுமக்களிடம் பணம் எதுவும் வாங்கமாட்டார் எனவும் அவர் சொத்து சேர்த்துள்ளார் என்பது சரியல்ல எனவும், பேரூராட்சி அவருடைய கட்டுப்பாட்டில் இருப்பது என்றால் அது சரியல்ல எனவும் ஒப்பந்த பணிகள் அனைத்தும் முறையாக விதிகளின்படி செய்யப்பட்டு பணிகள் ஒதுக்கப்பட்டதாகவும், திரு நாகமணிகண்டன் டெண்டர் மூலம் தெரு விளக்கு பணிகளை பெற்றுள்ளார் எனவும் திரு பழனிச்சாமி என்பவர் தனக்கு தெரியாது எனவும், திரு. நாகமணிகண்டன் என்பவர் திரு. முத்துக்குமாருக்கு பினாமி என்றால் இது சரியல்ல

எனவும், இவர்களை தவிர மற்ற ஐந்து ஒப்பந்தக்காரர்கள் உள்ளனர் எனவும் அனைவருக்கும் குறைந்த ஒப்பந்தபுள்ளி கோரியவருக்கு வேலை கொடுப்பதாகவும், இந்த வேலைகள் எல்லாம் திரு முத்துக்குமார் தான் பினாமியாக செய்வார் என்பது சரியல்ல எனவும் திருமதி கனகவல்லி சொத்து சேர்த்துள்ளார் என்பதும் சரியல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

திரு. ப. முத்துக்குமார், குடிநீர் குழாய் பொருத்துநர், இம்முறைமன்ற நடுவத்தில் 24.01.2018ல் நேரில் ஆஜராகி வாக்கு மூலம் அளித்தார். மேற்படி, வாக்குமூலத்தில், தான் மருதுார் பேரூராட்சியில் 2006 ஆம் ஆண்டு முதல் 12 ஆண்டுகளாக பிளாம்பராக பணிபுரிவதாகவும், அதற்கு முன்பு 10 ஆண்டுகள் தினக்கூலியாக இருந்ததாகவும் திரு சந்திரன் என்பவருடைய மனு விவரம் தனக்கு தெரியும் எனவும், பேரூராட்சிகளின் பல பகுதிகள் தனக்கு தெரியும் என்பதால் அந்த பகுதிகளுக்கு செயல் அலுவலர்கள் தன்னை உடன் அழைத்துச் செல்வார்கள் எனவும், அவர்களுடைய நெருக்கத்தினை பயன்படுத்தி தான் எந்த தவறும் செய்வதில்லை எனவும், செயல் அலுவலர்களிடம் மனுதாரர் பல பேருக்காக மனு போடும்போது செயல் அலுவலர்கள் அந்த பகுதிகள் எல்லாம் தனக்கு தெரியும் என்பதால் தன்னையும் அழைத்துச் செல்வார்கள் எனவும் மனுதாரர் தான் நினைக்கும்படி நடக்காமல் இருந்தால் அதற்கு தான் தான் காரணம் என கருதுவார் எனவும் சில சமயம் சிலர் ஏதாவது வேலை நடக்கவில்லை என தன்னிடம் தெரிவித்தால் தான் செயல் அலுவலரை பாருங்கள் என சொல்வதாகவும், மற்றபடி செயல் அலுவலர்கள் தன்னை பார்க்கச் சொல்லமாட்டார்கள் எனவும் திருமதி கனகவல்லி என்பவர் இளநிலை உதவியாளராக பணி செய்கிறார் எனவும், குடிநீர் சம்பந்தமாக ஏதாவது வேலைகளை சொன்னால் தான் செய்வதாகவும், மற்ற அலுவலக வேலைகள் எதுவும் தன்னிடம் சொல்ல மாட்டார் எனவும் அலுவலக பணிகளை 75 சதவீதம் திருமதி கனகவல்லிக்காக தான் செய்கிறேன் என்றால் அது சரியல்ல எனவும், அவரவர்கள் வேலையினை அவரவர்கள் பார்ப்பதாகவும் தனது பெயரிலோ அல்லது பினாமிகள் பெயரிலோ சொத்துக்கள் இல்லை எனவும், திரு. நாகமணிகண்டன் மற்றும் திரு,பழனிச்சாமி ஆகியோர் தனக்கு தெரியும் எனவும் அவர்கள் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரி முறைப்படி டெண்டர் பெற்றுத்தான் பணிகளை செய்கிறார்கள் எனவும், அவர்கள் தன்னுடைய பினாமிகள் எனக் கூறுவது சரியல்ல எனவும், மனுதாரரும் தானும் உறவினர்கள் எனவும், தன் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக புகார் செய்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, மருதுார் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர் மனுதார்களின் நேரடி வாக்குமூலங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுதாரர் திரு. ந. சந்திரன் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள புகார்கள் குறித்து எவ்விதமான ஆதார ஆவணங்களையோ அல்லது சாட்சியங்களையோ இம்முறைமன்ற நடுவத்தின் முன் சமர்பிக்கவில்லை. மேலும், எதிர் மனுதாராகள், வருமானத்தை விட அதிகமாக சொத்து சேர்த்தார்கள் என்ற புகாருக்கும், திரு நாகமணிகண்டன் மற்றும் திரு. பழனிச்சாமி ஆகியோர் திரு ப. முத்தக்குமாரின் பினாமிகள் என்பதற்கான ஆதாரங்களோ ஆவணங்களோ எதுவும் தன்னிடம் இல்லை என முறையீட்டு மனுதாரரால் தனது வாக்கு மூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் திரு. ப. முத்துக்குமார் குடிநீர் சம்பந்தமான பணிகளை கவனிப்பார் எனவும்

அவர் யாரிடமும் பணம் வாங்கமாட்டார் எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். திரு. ப.முத்துக்குமார் என்பவர் இப்பேரூராட்சியில் 2006 முதல் பணிபுரிவதால் பேரூராட்சியின் பல பகுதிகள் தனக்கு தெரியும் என்பதால் பொதுமக்களிடம் இருந்து வரும் கோரிக்கைளை ஆய்வு மேற்கொள்ள பேரூராட்சி செயல் அலுவலர்கள் தன்னை அழைத்து செல்வார்கள் எனவும் இதன் பொருட்டு நான் எந்த விதமான தவறுகளும் செய்யவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இந்நிலையில் மேற்கண்ட வாக்குமூலங்கள் மற்றும் மருதூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையை ஏற்று, முறையீட்டு மனுதாரரின் இம்முறையீட்டு மனுவினை ஆதாரமற்றதாக கருதி தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் வருடம் பிப்ரவரித் திங்கள் 27 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

-//உத்திரவின்படி - அனுப்பப்படுகிறது//-

செயலாளர் 6/3/18

பெறுநர்

1. திரு. ந. சந்திரன்,
   த/பெ திரு நல்லி,
   வடக்கிமேடு,
   குப்புரெட்டிபட்டி,
   இனுங்கூர் அஞ்சல்,
   குளித்தலை வட்டம்,
   கரூர் மாவட்டம்.
2. செயல் அலுவலர்,
   மருதூர் பேரூராட்சி,
   கரூர் மாவட்டம்,
3. திரு. பா. முத்துக்குமார்,
   குடிநீர் குழாய் பொருத்துநர்,
   மருதூர் பேரூராட்சி,
   கரூர் மாவட்டம்.
4. திருமதி. எம். கனகவள்ளி,
   இளநிலை உதவியாளர்,
   மருதூர் பேரூராட்சி,
   கரூர் மாவட்டம்.
5. திரு. க. சண்முகம்,
   செயல் அலுவலர்,
   வட மதுரை பேரூராட்சி,
   திண்டுக்கல் மாவட்டம்.
6. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   திண்டுக்கல் மண்டலம்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   திண்டுக்கல்.

2/3/18

6/3/18